வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06 | 18.10.2025 சனிக்கிழமை | இதழ் : 291 | பக்கங்கள் : 08




## இலங்கை - இந்திய பிரதமர்கள் சந்திப்பு:

# மீனவர் பிரச்னை தொடர்பில் பேச்சு

புதுடில்லி, ஒக்ரோபர் 18

**இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னைகள் - அவர்களின் நலன்கள் தொடர்பில் இரு நாடுகளின் பிரதமர்களும் நேற்று கலந்துரையாடினர்.**

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் சென்றுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய அந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

இதன்போதே, இரு நாடுகளின் மீனவர்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பின் 07



## நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல்

ஒன்ராறியோ, ஒக். 18

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆவது ஆண்டு நினைவும் நீதிக்கான கூடலும் இன்று சனிக்கிழமை கனடாவின் ஒன்ராறியோ நகரில் நடைபெறவுள்ளது.

சமூக, அரசியல் செயல்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தியின் ஒழுங்கமைப்பில் இந்த நினைவேந் தல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போர் காலத்தில் பி.பி.சி. தமிழ், சிங்கள சேவைகள், வீரகேசரி, ராவய பத்திரிகைகளுக்கு 07

## '13' குறித்து முன்னணியிடம் சரியான கருத்துகள் இல்லை!

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 18

"மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதில், தாம் போட்டியிடுவோம் எனக் கூறுகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பிறகு 13ஆம் திருத்தச் சட்டத்தை அடியோடு மறுக்கிறோம் என்கின்றனர். இதனால், அவர்களிடத்தில் அது தொடர்பில் சரியான கருத்து இல்லை என்பதே உண்மை", என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சுவிற்சர்லாந்தில் நடந்த சமஷ்டி தொடர்பான கலந்துரையாடலில் 07

### தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரம்:

## திகதி குறிப்பிடப்படாமல் உரையாடல் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 18

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கலந்துரையாடல் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிய வருகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 750 ரூபாயை ஒருநாள் சம்பளமாக வழங்குவது தொடர்பில் தோட்ட உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு நேற்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில் அமைச்சில் நடைபெற விருந்த இந்தக் கூட்டத்துக்கு பெருந்தோட்ட உரிமையாளர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. இதையடுத்து இந்தக் கலந்துரையாடல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதி ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

## சுகாதார துறை விருத்திக்கு மானியத்துடன் கடனுதவி!

### ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக். 18

சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காகஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 69 இலட்சம் டொலர் மானியத்துடனான 10 கோடி டொலர் கடனுக்கான ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

நிதி அமைச்சின் தகவல்களுக்கமைய இந்தக் கடனுக்கான ஒப்பந்தத்தில், இலங்கை சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவும், ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் அதன் 07

## அடுத்த ஆண்டு தொடக்கம் பாடப் புத்தகங்கள் இல்லை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 18

அடுத்த கல்வி ஆண்டில் தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். 07

## மக்கள் விரும்பாத சட்டத்தை நாம் நிறைவேற்றமாட்டோம்

### ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, ஒக். 18

மக்கள் விரும்பாத எந்தவொரு சட்டத்தையும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறுவர்களுக்கு எதிரான உடல் ரீதியான தண்டனையை தடை செய்யும் தண்டனை சட்டத்தில் திருத்தம் பாராளுமன்றத்தில் விவாதிக்க மட்டுமே கொண்டு வரப்பட்டது. மக்கள் இதை நிராகரித்தால் அது ஒருபோதும் சட்டமாக அமுல்படுத்தப்படாது என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் 28ஆவது தேசிய ஆசிரியர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும், சட்டங்கள் ஆட்சியாளர்களுக்காக அல்ல மக்களுக்காகவே இயற்றப்படுகின்றன. சட்டங்கள் 07

## வலி. வடக்கில் படைகளுக்காக காணிகளை சுவீகரிக்க முயற்சி

### காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

பலாலி இராணுவ மருத்துவமனையை சூழவுள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி மருத்துவமனை கட்டடங்களை இராணுவத்தினர் கட்டி வருகின்றனர். தற்போது போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த கீரிமலையில் ரேடார் அமைக்கப் போவதாகக் கூறி, 2 ஏக்கர் தனியார் காணியை கடற்படை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறது - என்று வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்றைய தினம் மயிலிட்டியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் காணிகளை மக்களுக்கே கையளிப்போம் என்றுகூறி ஆட்சியமைத்தவர்கள் இன்று ஆட்சி அமைத்து ஒரு வருடகாலம் கடந்தும் காணிகளை 07

## போதைப்பொருள் ஒழிப்பு: தேசிய செயல்பாட்டு சபை

### முதன்முறையாக கூடியது!

கொழும்பு, ஒக். 18

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள தேசிய பேரழிவான போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கில் தேசிய திட்டத்தை செயல்படுத்துவதற்காக 'முழு நாடுமே ஒன்றாக தேசிய செயல்பாட்டு சபை' ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் முதன்முறையாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை 07

## 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் அறிமுகம் இன்று



யாழ்ப்பாணம், ஒக். 18

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர் காலம்' நூல் அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது. சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கலாநிதி சிவகுமார் சுப்பிரமணியம் 07

## அதிகஷ்ட பிரதேசத்திலிருந்து தீவக பாடசாலைகள் நீக்கம்?

யாழ்ப்பாணம், ஒக். 18

நெடுந்தீவிலுள்ள 8 பாடசாலைகளில் 6 பாடசாலைகளும் அனலைதீவில் 3 பாடசாலைகளும் எழுவைதீவில் ஒரு பாடசாலையும் அதிகஷ்டப் பிரதேசத்திலிருந்து நீக்கப்படவுள்ளன என்று வடக்கு ஆளுநர் நா. வேதநாயகனிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலைகளின் அதிபர்களாலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்கனவே, இந்தப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# ஆசிரியரின் நடத்தைகளிலிருந்தே மாணவர்கள் அதிகம் கற்கிறார்கள்

## கலைப்பீடாதிபதி ரகுராம்

யாழ்ப்பாணம், ஒக். 18

பிள்ளைகள் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதனைவிட அவர் எப்படியானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அதிகளவு கற்றுக் கொள்கிறார்கள் - என்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தெரிவித்துள்ளார்.



சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 3 நூல்களின் வெளியீட்டு விழாவும் கோகிலா மகேந்திரன் தலைமையில் அண்மையில் பன்னாலை வரத் தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இதில், பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எப்படி ஓர் ஆசிரியத்துவம் இருக்க வேண்டும் என்பதனை சமூகத்துக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்த சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை முன்வைத்து கோகிலா மகேந்திரன் அம்மையார் தேன் குயிலின் முதலாவது கட்டுரையான 'குருவும் கெழுவும் திறனாகும்மே' என்கிற வியப்புரையில் ஒரு விடயத்தை சிறப்பாக குறிப்பிடுகிறார். ஒரு நல்ல கல்வி யாரையும் நல்லபடி மாற்றும். ஒரு நல்லாசிரியர் எல்லாவற்றையுமே சிறப்பானதாக மாற்றும் வல்லமைமிக்கவர். பிள்ளைகள் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதனை விட அவர் எப்படியானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அதிகளவு கற்றுக் கொள்கிறார்கள்.

கற்பித்தலில் ஆசையுள்ள ஆசிரியர்கள் தங்கள் இறுதிக் காலம்வரை தொடர்ந்து கற்கும் பண்புள்ளவர்களாக இருக்கிறார்கள். அவரிடம் கற்கும் மாணவர்கள் கற்பதிலே ஆர்வமுடையவர் களாகிறார்கள். இவை ஆசிரியத்துவம் பற்றிய நவீனகால சிந்தனைகள் என்று குறிப்பிடுகிறார்.

கோகிலா மகேந்திரன் எப்போதுமே தனது முன்மாதிரியான செயல்பாடுகள் மூலமாக மாணவர் சமூகத்துக்கு பெரிய வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என்பதனை அவருடைய அறிவுரைகளிலும் பார்க்க அவரது செயல்பாட்டுத்தளம் எங்களுக்கு எப்போதும் எடுத்துக் கூறி வந்திருக்கிறது. அவர் செயல்படுகின்ற ஆசிரியராக இருந்திருக்கிறார்.

பதின்மவயது மாணவர்களும் அவர்களின் ஆசிரியர்களும் என்கிற அவரது இன்னொரு கட்டுரையில் பதின்ம வயதினர் தேடுகின்ற அவர்களின் கண்களுக்கு தெரிகின்ற 'ரோல் மொடலா'க ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் முறைகளையும் முடிவெடுக்கும் முறைகளையும் உணர்ச்சிகளை கையாளும் முறைகளையும் மாணவர்கள் நேரே பார்க்கிறார்கள். ஆசிரியர்கள் தாங்கள் எங்காவது தவறு செய்திருந்தால் மன்னிப்பு கேட்கவும் தயங்க வேண்டியதில்லை. தங்களுக்குத் தெரியாத விடயத்தை உண்மையிலேயே தெரியாது எனக் கூறிவிட்டு செல்லும்போது மாணவர்களிடத்தில் அந்த ஆசிரியரின் பிம்பம் உயர்கிறது. இன்றைக்கு எல்லாம் தெரிந்தவர்களாக இருக்கின்ற அல்லது அதனை ஒரு தோற்றமாகக் காட்டுகின்ற போக்கிலிருந்து மாறுபட்டு தெரியாததை கற்றுக்கொண்டு வெளிப்படுத்தல் முக்கியமானது.

ஆசிரியரை மாணவர்களுக்கு பிடிக்குமாயின் பெறுபேறுகள் மாத்திரமல்ல, மாணவர்களின் எதிர்கால ஆளுமையும் வாழ்க்கையும்கூட சிறப்பாக வரும். அதேநேரம் தனக்குப் பிடிக்காத ஆசிரியரிடமிருந்து மாணவன் எதையுமே கற்றுக் கொள்வதில்லை என்கிறார். ஆகவே, நாங்கள் வகுப்பறைகளுக்கு, விரிவுரை மண்டபங்களுக்கு செல்லும்போது எப்படி நாங்கள் எங்களை மாணவர்கள் முன் வெளிப்படுத்தப் போகிறோம். எங்களுடைய தோற்றம், நாங்கள் நடந்து கொள்ளும் முறை, எங்களின் செயல்பாடுகள் என அனைத்திலுமே தங்கியிருக்கிறது என்கிற இந்த விடயங்கள் யாவுமே இந்தக் கட்டுரையிலே முன்வைக்கப்பட்டிருக்கின்றன - என்றார்.

(ஐ-02)

# மந்திரிமனையை பாதுகாக்கும் செயல்பாடுகள் ஆரம்பமாகின



யாழ்ப்பாணம்,ஒக். 18

நல்லூரில் அமைந்துள்ள மந்திரி மனையை மேலும் சேதமடையாது காப்பாற்றும் நோக்கிலான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில், கடும் மழையால் மந்திரிமனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதையடுத்தே, அதனைப் பாதுகாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களம், காணி உரிமையாளர்கள் இணைந்து இந்தச் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அல்லைப்பிட்டியில் நேற்று பனை விதைகள் நடுகை!

யாழ்ப்பாணம், ஒக். 18

அல்லைப்பிட்டியில் இளைஞர்களின் பங்களிப்புடன் நேற்றைய தினம் பனம் விதைகள் விதைக்கப்பட்டன.

தீவகத்தின் அடையாளத்தை பாதுகாத்து பசுமையை உருவாக்கவும் பனைமரங்களின் பாதுகாப்பை உறுதி செய்து நன்னீர் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அல்லையூர் இளைஞர்களின் ஏற்பாடில், வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபையின் அனுசரணையுடன் இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதேச சபை உறுபினர்கள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர்கள் எனப் பலர் பங்கேற்று பனை விதைகளை நாட்டி வைத்தனர்.

(ஐ-05)

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சிறுவர், முதியோர் தின நிகழ்வு

வடமராட்சி, ஒக். 18

வடமராட்சி கிழக்கு பிரதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் சுபலிங்கம் உஷா தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியக விழா மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பதில் அத்தியட்சகர் கதிரமலை உமாசுதன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொழில் துறை வழிகாட்டல் ஆலோசகர் குஞ்சிதபாதம் கௌதமன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமர் யுகதீஸ், குடத்தனை கரையூர் அ. த. க. பாடசாலை அதிபர் மு. கதிர்காமலிங்கம், மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் செ. சிறிராமசந்திரன், மருதங்கேணி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்களின் பாடல், நடனம், கிராமிய பாடல்கள் எனப் பல கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன், சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

(ஐ-08)




கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்

இலங்கைத் தமிழ்

சிறுவர் இலக்கிய ஆளுமைகள்

பகிர்தலும் பரவலாக்கலும்

19-10-2025

காலை 9.00 - மாலை 4.00

முழுநாள் நிகழ்வு

*வரவேற்பு
*சிறுவர் நூலகம் திறப்பு
*நூல் வெளியீடு
*கண்காட்சி
*உரைகள்
*மதிய உணவு
*பகிர்வும்,பரவலும்



அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

K.A.S. Sathiamanai Library
: No-1 K.A.Subramaniam Lane, Tholpuram West ,Chulipuram- 40230.
Telephone +94 77 898 2024, +94 75 767 0149
sathiamanai.library@gmail.com
website: sathiamanai.blogspot.com

எங்கள் நிறுவனத்திற்கு
Store Keeper, சுத்திகரிப்பாளர் பணிக்கு
ஆட்கள் தேவை

**1. Store Keeper**

தகுதி :

குறைந்தபட்சம் A/L தேர்ச்சி

Store / Stock பராமரிப்பு அனுபவம் இருந்தால் முன்னுரிமை

கணினி அறிவு (MS Excel )

**2. சுத்திகரிப்பாளர்**

சம்பளம் : தகுதி மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பணியிடம் :

காதி அபூபக்கர் வீதி, நாவாந்துறை.

தொடர்புக்கு : 0766180507

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.10.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## முன்னணி - ஜனநாயக கூட்டணி உடன்பாடு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில் இயங்கிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்ஃக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான அரசியல் கூட்டணி எதுவரையில் என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தொடர்ந்தும் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருதத்ச் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்துவரும் நிலையில், மறுபுறம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் அதன் முக்கியத்துவம் - அதனை உச்சபட்சமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில்தான் கூட்டணி தொடருமா என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டது கொள்கை அடிப்படையில் என்று கூறிக் கொண்டாலும்கூட, அரசியலை யதார்த்தபூர்வமாகக் கையாள வேண்டும் என்று கருதுபவர்களும் அதற்கு மாறாக சிந்திப்பவர்களும் ஒன்றாகப் பயணிப்பது என்பது மிகவும் சிரமமான ஒன்று. இவ்வாறானதொரு பின்னணியில்தான் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் கூட்டணிகள் எவையுமே நிலைக்கவில்லை. அத்துடன், ஒரு புதிய கூட்டணியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் இதுவரையில் வெற்றி பெறவில்லை - ஏன் அவ்வாறு நிகழவில்லை? அடிப்படையான காரணம் கொள்கையல்ல மாறாக, சூழ்நிலையை கையாள வேண்டும் என்பதை விடவும் தங்களுடைய தன்முனைப்பு வாதங்களுக்கும் சுயநலன்களுக்கும் இடமளித்தமையே பிரதான காரணமாகும். அதுவே, யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினாறு வருடகால அரசியல் சாபக்கேடாகத் தொடர்கிறது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பேரம் பேசும் பலமாக இருந்தது. அந்தக் காலத்தில் அவர்களின் அணுகுமுறையுடன் பெரியளவில் எவரும் முரண்படவில்லை. மாற்று இயக்கங்களை சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பால் தடை செய்யப்பட்டவர்கள் என்னும் ஒரு பிரிவினர் எதிர்ப்புகளை வெளியிட்டபோதிலும்கூட பெரும்பான்மையானவர்கள் விடுதலைப் புலிகளால் ஒரு நல்ல விடயம் நிகழுமென்றே நம்பினர். விடுதலைப் புலிகள் அமைப்பு தங்களின் உச்சபட்சமான அர்ப்பணிப்பையும் தியாகங்களையும் செய்து கொண்டிருந்தபோது, அதற்கு மாறாகப் பேசுவதும் - சிந்திப்பதும் நடைமுறைக்குப் பொருந்தாத விடயமாகவே இருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இன்று தங்களுக்குள் அடிபடும் அனைத்துத் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும் விடுதலைப் புலிகள் அமைப்பை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு வலியுறுத்தின. ஆனால், 2009 போர் தோல்வியுடன் அந்த அத்தியாயம் முடிவுற்றது.

புதிய அத்தியாயத்தை எவ்வாறு தொடங்குவது, எங்கிருந்து தொடங்குவது என்னும் கேள்விகளுக்கான பதிலில்தான்- "இருப்பதை உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு, முன்னோக்கி பயணிப்பதுதான் புத்திசாதுரியமானது" என்னும் வாதம் மேலேழுந்தது. இதுதான், மாகாண சபையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் உரையாடலை ஏற்படுத்தியது. ஆனால், இதனை ஆரம்பத்தில் சம்பந்தன் முறையாகக் கையாளவில்லை. அரசியல் யாப்பு என்னும் கதையுடன் காலம் வீணாகக் கழிந்தது. இப்போது, கிடைத்திருக்கும் அனைத்து அனுபவங்களும் அனைவருக்குமே நல்ல பாடங்களை புகட்டியிருக்கும்நிலையில், இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கட்சிகள் அனைத்துமே இந்த நிலைப்பாட்டில் ஒன்றாக சேரக்கூடிய நிலையிலேயே இருக்கின்றன.

ஆனால், உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்னும் தேவைக்கு அமைவாக ஐந்து கட்சிகளின் கூட்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்ஃடன் கூட்டணி அமைத்துக் கொண்டனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தொடர்ந்தும் நடைமுறைக்கு சாத்தியமானவற்றை நிராகரிக்கும் அரசியலை முன்னெடுத்துவரும் அமைப்பாக இருக்கவே விரும்புகிறது. ஆனால், அதற்கான அர்ப்பணிப்பை இதுவரையில் நிரூபிக்கவில்லை. இந்தநிலையில் யதார்த்தபூர்வமான அணுகுமுறைக்கு வர வேண்டும் அல்லது தங்களுடைய பாதைக்கான உச்சபட்சமான அர்ப்பணிப்பைக் காண்பிக்க வேண்டும். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்புபோல். உச்சபட்சமான அர்ப்பணிப்பு இல்லாமல் அடுத்தவர்களை விமர்சித்துக் கொண்டிருப்பதானது எப்போதும் நிலைமைகளை குழப்புவதற்கும் மக்களுக்கு அவநம்பிக்கையை கொடுப்பதற்குமே பயன்படும்.

# அரியாலைக்கு சென்றார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஒக். 18



அரியாலை காரைமுனங்கு பிரதேசத்தில் நல்லூர் பிரதேச சபையால் குப்பைகள் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மாகாண ஆளு நர் நா.வேதநாயகனுக்கு மனு சமர்ப்பிக்கப் பட்டிருந்த நிலையில், அந்தப் பகுதியை ஆளுநர் நேற்று வெள்ளிக்கிழமை காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் தரம் பிரிப்பு நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் அங்கு முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பிலும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் ஆளுநருக்கு எடுத்துக் கூறினார்.

தரம் பிரிக்கும் நடவடிக்கையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 17பேர் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்களுடனும் ஆளுநர் கலந்துரையாடினார்.

இந்தக் கண்காணிப்பு பயணத்தின்போது ஆளுநரின் செயலாளர், அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(அ-3-5)

# உலக வங்கியின் உதவியுடன் யாழ். கோட்டை அபிவிருத்தி

## ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 18



உலக வங்கியின் நிதியுதவியில் யாழ்ப்பாணக் கோட்டையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், கோட்டையின் அபிவிருத்தியின் தேவைப்பாடு தொடர்பில் வலியுறுத்தினார். நகர அபிவிருத்தி அதிகார சபையால் கோட்டையின் அபிவிருத்தி தொடர்பில் தயாரிக்கப்பட்ட திட்டமுன்மொழிவும் முன்வைக்கப்பட்டது. திட்டத்தை தொடங்குவதற்கான தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு புத்தசாசன சமய கலாசார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலருடன் விரிவான கலந்துரையாடல் நடத்துவதற்கு இன்றைய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், தொல்பொருள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், உலக வங்கிக் குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைசார் சிரேஷ்ட விரிவுரையாளர் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்கள் பங்கேற்றிருந்தனர். (அ)

# பஸ்களில் சோதனை நடவடிக்கை


கிளிநொச்சி, ஒக். 18

கிளிநொச்சி பரந்தன் பகுதியில், போதைப்பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில், தூர பிரதேசங்களுக்கு செல்லும் பஸ்களில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு பரந்தன் பகுதியில் பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனையில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த சில்வாவின் வழிகாட்டலில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி தயாவன்ச தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 18 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 01
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண்செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் அவர்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். சின்னச் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

# தகரங்கள் மேலே விழுந்ததால் மயக்கமுற்ற நபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணத்தில் தகரங்கள் மேலே விழுந்ததால் மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை பகுதியைச் சேர்ந்த ஹரிகரராஜா டளஸ்குமார் (வயது -36) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் யாழில் உள்ள ஒரு ஹாட்வெயார் கடையில் பணி புரிந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி கடையில் அடுக்கப்பட்டிருந்த தகரங்களை நகர்த்துவதற்கு முயற்சித்தார். இதன்போது தகரங்கள் அவர் மீது விழுந்ததில் அவர் மயக்க முற்றார்.

பின்னர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை அவர் உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-05)



## ஓட்டோ மீது மோதிய டிப்பர் கடை தொகுதிக்குள் புகுந்தது

**சாவகச்சேரியில் பரபரப்பு சம்பவம்**

யாழ்ப்பாணம், ஒக். 18

கற்களை ஏற்றி வந்த டிப்பர், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மீது மோதியதோடு அருகிலிருந்த கடைத் தொகுதிக்குள் புகுந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 07:30 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து கற்களை ஏற்றியவாறு யாழ்ப்பாணத்துக்கு பயணித்த டிப்பர், சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுடன் மோதியதோடு கடைத் தொகுதிக்குள்ளும் புகுந்தது.

இதனால் கடைத் தொகுதியின் வாசல் கதவுகள் முற்றாகச் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த டிப்பர் சாரதி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-03)

## சர்வதேச பிரயோக விஞ்ஞான ஆய்வரங்கு

வவுனியா, ஒக். 18

வவுனியா பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தால் முதலாவது சர்வதேச பிரயோக விஞ்ஞான ஆய்வரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆய்வரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

மேலும், ஆய்வரங்கில் சூழலியல் விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு துறைகளைச் சேர்ந்த பன்னாட்டு ஆய்வு வல்லுநர்கள் மற்றும் பேராசிரியர்களின் முதன்மை உரைகள், கலாநிதிக் கற்கைகள் கருத்தரங்கம் மற்றும் தேசிய நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சூழலியல் சார் பிரச்னைகளுக்கான தீர்வுகளை அடைய புதிய ஆய்வுக் கலந்துரையாடல்கள் என்பனவும் நடைபெற்றன. (எ-10)

## கடலாமை இறைச்சியுடன் பாசையூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 18

கடலாமை இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ். பாசையூரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட சுற்றிவ ளைப்பின் போது 35, 400 கிலோ கிராம் கடலாமை இறைச்சி வைத்திருந்த குற்றச் சாட்டில் இவர் கைது செய்யப் பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தீபாவளி விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 18

தென்மராட்சி - சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம் நடத்தும் தீபாவளி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 03. 00 மணிக்கு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் விவேகானந்தன் மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆலய பிரதமகுரு சிவசிறீ சி. கிருபாகரக்குருக்கள் திருமுன்னிலை வகிப்பார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர், சைவப் புலவர் சி. கா. கமலநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கவிஞர் வேல். நந்தகுமார் மற்றும் தொல்லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர் அருள்மொழிவாருதி க. கயிலைவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர். சிறப்பு நிகழ்வாக "பண்பிழந்த தமிழ்க் கலாசாரம்" என்னும் விடயப்பொருளில் வில்லிசையும் பரிசளிப்பும் நடைபெறவுள்ளது. (எ)

## விபத்தில் சிக்கிய முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 18

விபத்துக்குள்ளாகி யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். முதலாம் வட்டாரம் முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த கந்தசாமி விஸ்வலிங்கம் (வயது -74) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 14ஆம் திகதி மாஞ்சோலை மருத்துவமனையிலிருந்து துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது முள்ளியவளை நித்தியானந்தா கல்லூரிக்கு அருகாமையில் வலது பக்கமாக துவிச்சக்கர வண்டியை திருப்ப முற்பட்டவேளை பின்னால் வந்த மகேந்திரா வாகனம் இவர் மீது மோதி விபத்து சம்பவித்தது.

பின்னர் மாஞ்சோலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை அதிகாரி திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வர்த்தகர் சங்க பிரதிநிதிகளை டில்லியில் சந்தித்தார் பிரதமர் ஹரிணி!

## முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வு



புதுடில்லி, ஒக். 18

**இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய, புதுடில்லியில் நேற்று முன் தினம் இந்தியக் கைத்தொழில் கூட்டுறவு மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைச் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.**

இந்தச் சந்திப்பில் இரு தரப்புப் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், வலுசக்தி, விவசாயம், சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, நிதித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக அபிவிருத்தி, திறமை வளர்ப்பு மற்றும் புத்தாக்கம், ஆரோக்கிய சுற்றுலா, உர உற்பத்தி மற்றும் துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட முக்கியத்துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், கல்விச் சீர்திருத்தம், டிஜிற்றல் மயமாக்குதல், மற்றும் திறமை அபிவிருத்தி ஆகிய முயற்சிகள் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய, அறிவு சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் இலங்கையின் உறுதிப்பாட்டை எடுத்துரைத்தார்.

எதிர்காலத்திற்குத் தகுந்த பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன், இலங்கையின் புதிய கல்வி மற்றும் புத்தாக்கக் கொள்கைக் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு, துறைசார் கல்வி மற்றும் திறமை அடிப்படையிலான கற்றல் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதைப் பிரதமர் விளக்கிக் கூறினார்.

குறிப்பாக உற்பத்தி, உள்கட்டமைப்பு, கல்வித் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய துறைகளில் இலங்கையுடனான தமது ஈடுபாட்டை விரிவுபடுத்துமாறு பிரதமர் இந்திய வர்த்தகத் துறைக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், ஏ.ஐ மற்றும் புத்தாக்கத் துறைகளில் ஒத்துழைப்பு, தொழில்சார் பயிற்சி, கல்வித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் கூட்டுறவையும் கற்றல் மாதிரிகளின் அவசியத்தையும் முன்மொழிந்தார்.

விவசாயப் புத்தாக்க அமைப்புகள், உரத் தொழில்நுட்பம், ஆரோக்கியச் சுற்றுலா முயற்சிகள் மற்றும் இலங்கையின் நிதிச் சூழலை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிதித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான சாதகமான ஒத்துழைப்புக் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# 21ஆம் திகதி விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக். 18

பெரும்பாலான ஆசிரியர்களின் கோரிக்கைக்கு அமைவாக தீபாவளி திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி விசேட விடுமுறையை பெற்றுத்தர ஏற்பாடு செய்யுமாறு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்புக்கு இலங்கை கல்விச் சமூக சம்மேளனம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

தலைவர் ஆர்.சங்கர் மணிவண்ணன் தலைமையிலான குழுவினர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், மத்திய மலைநாட்டில், மத்திய மாகாணத்தில் இந்துக்கள் பெரும்பாலாக வாழும் பிரதேசமாகும். எமது பிரதேசத்தில் தீபாவளி வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழமையான விடயம். பெரும்பாலான ஆசிரியர்களின் கோரிக்கைக்கு இணங்க தீபாவளி தினத்துக்கு மறுதினம் விசேட விடுமுறையாக பெற்று தர ஏற்பாடு செய்யுத்தருமாறு கோருவதுடன், அதற்கான பதில் பாடசாலை தினத்தை பிறிதொரு நாளில் நடத்தி தர முடியும் என தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# விமல் வீரவன்ஸ தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி

கொழும்பு, ஒக். 18

இலங்கை குடிமக்களுக்கு டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்தியாவுடன் இலங்கை அரசு கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் இரண்டு தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை மனித உரிமைகள் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

தொடர்புடைய மனுக்களைத் தொடர முடியாது என்று சட்டமா அதிபர் எழுப்பிய ஆரம்ப ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட ஆயம், பின்னர் இந்த மனுக்களை விசாரணையின்றி தள்ளுபடி செய்தது. (அ)

# வரி வருவாயில் சுங்கத்துறை புதிய சாதனை!

கொழும்பு, ஒக். 18

இலங்கை சுங்கத்துறை கடந்த 15 ஆம் திகதி 2,470 மில்லியன் ரூபாவை வசூலித்தது.

இது இதுவரை இல்லாத அளவிலான ஒரு நாள் வரி வருவாயை பதிவு செய்த சந்தர்ப்பம் என்று சுங்கத்துறை தெரிவித்துள்ளது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கூற்றுப்படி, இந்த ஆண்டு இதுவரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் 1,867 பில்லியன் ரூபாவாகும்.

இதனால், சுங்கத்துறை அதன் வருடாந்த இலக்கான ரூ.2,115 பில்லியனைத் தாண்டும் பாதையில் செல்கிறது.

இதற்கு வாகன இறக்குமதி வரிகள் முக்கிய வருமான ஆதாரமாக இருப்பதாகவும், அவை சுங்க வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கீரிச்சம்பா பதுக்கல்!

## அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

கொழும்பு, ஒக். 18

பாரியளவான அரிசி ஆலை உரிமையாளர்கள் கீரிச் சம்பா அரிசியை பதுக்கி வைப்பதாகவும் அதன் பிரதிபலனாக சந்தையில் அரிசித் தட்டுப்பாடு உருவாகியுள்ளதாகவும் விவசாயிகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், கீரிச் சம்பாவுக்கு பதிலாக மாற்று அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதனூடாக வேறு மாபியா நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்று அந்தச் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ.கே. சேமசிங்க கருத்து தெரிவிக்கையில்-

சந்தைகளில் 330-350 ரூபா என்ற அடிப்படையில் அதிக விலையில் கீரிச் சம்பா அரிசியை விற்பனை செய்கிறார்கள். இந்த விடயத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபையும் அமைதியாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அரிசி விலையின் ஏற்ற இறக்கத்தினூடாக அதிக இலாபத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் முயற்சிக்கிறார்கள். இதனூடாக மீண்டும் செயற்கையாகவே சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன-என்றார். (அ)

# அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயல்படுகிறது பொலிஸ் திணைக்களம்

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

ஆட்சியாளர்களை திருப்திப்படுத்துவதற்காக பொலிஸார் முறையற்ற வகையில் செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மெதிரிகிரிய பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாளக் குழுக்களை கைது செய்வதாகவும், போதைப்பொருட்களை கைப்பற்றுவதாகவும் அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஆனால் சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி ஏதும் குறிப்பிடுவதில்லை.

அனைத்து குற்றங்களையும் ராஜபக்ஷர்கள் மீது சுமத்துவதையே இந்த அரசாங்கம் பிரதான கொள்கையாக கொண்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கமும் இவ்வாறே செயற்பட்டது.

இறுதியில் நாட்டு மக்கள் நெருக்கடிக்குள்ளானார்கள்.

இந்த அரசாங்கமும் எம்மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

அந்த குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் நிரூபித்து உண்மையை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடவேண்டிய தேவை எமக்கு உள்ளது.

பொலிஸ் திணைக்களம் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுகிறது.

ஆட்சியாளர்களை திருப்திப்படுத்துவதற்காக பொலிஸார் முறையற்ற வகையில் செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும்-என்றார். (அ)

# மகிந்தவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி மீண்டும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஒக். 18

சட்டவிரோத சொத்து குவிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமை பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் நேற்று நெவில் வன்னியாராச்சியின் பிணை மனுவை நிராகரித்து, அவரை எதிர்வரும் ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

28 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சொத்துக்களை குவித்ததாகக் கூறப்படும் வழக்கில் நெவில் வன்னியாராச்சி கடந்த 02 ஆம் திகதி இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தால் கைது செய்யப்பட்டார். (அ)

# எம்.பிக்களின் சம்பளம் கட்சி நிதியத்தில் வைப்பு; தடை செய்யக் கோரி தயாசிறி எம்.பி. பிரேரணை

கொழும்பு, ஒக். 18

அரசியல் கட்சிகள் மக்கள் பிரதிநிதிகளின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் மூலம் கிடைக்கும் பணம் ஆகியவற்றை கட்சி நிதியில் வரவு வைப்பதைத் தடை செய்யக் கோரி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்.

இவ்வாறான நடைமுறைகள் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் சுதந்திரத்தை குறைமதிப்புக்குட்ப டுத்துவதாகவும் ஜனநாயகத்துக்கு கடுமையான சவாலை ஏற்படுத்துவதாகவும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு அரசியல் கட்சியும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை வசூலிப்பதையோ அல்லது கட்சிக் கணக்குகளுக்கு திருப்பி விடுவதையோ தடை செய்ய பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது



திருகோணமலை, ஒக். 18

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் தங்களது விவசாய நில அபகரிப்புக்கு எதிராக நேற்று 31 ஆவது நாளாக தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்று வருகிறது. இவ்வாறான நிலையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கிய இரண்டாம் கட்ட வாக்குறுதிக்கு இன்னும் இரண்டு நாட்களே எஞ்சியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி எனக்கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி சூரியமின் சக்தி உற்பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு தாரை வார்த்துள்ளதாக கூறினர். இந்தப் பகுதியில் இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டத்துக்கு வழங்கியதால் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே, இதற்கு சாதகமான தீர்வை பெற்றுத்தராத பட்சத்தில் போராட்டம் தொடரும் எனவும் மக்கள் எச்சரித்துள்ளனர்.

(எ-12)

## கட்டுப்பாட்டு விலையை மீறிய அரிசி வியாபாரிக்கு அபராதம்

கல்முனை, ஒக். 18

அரசாங்க கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிக்கு ஓர் இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு அம்பாறை மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையால் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், கல்முனை பிரதேசத்தில் உள்ள குறித்த வியாபார நிலைய உரிமையாளருக்கு நேற்று முன்தினம் 100, 000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட் டது.

அண்மையில் அம்பாறை மாவட்ட செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது கட்டுப்பாட்டு விலைக்கு அதிக விலைக்கு அரிசி விற் பனை செய்த வியாபார நிலை யங்கள் அடையாளம் காணப் பட்டன.

இதனடிப்படையில் குறித்த வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ-01)

## பண்டாரவளையில் இடம்பெற்ற நிகழ்வு முற்றுமுழுதாக ஒரு ஏமாற்று வேலை!

கொழும்பு, ஒக். 18

அரசாங்கத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தமிழ் அரசியல்வாதிகள் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள், ஒட்டுமொத்த நாட்டினர். அத்துடன் இலங்கையில் உள்ள இராஜதந்திர சமூகம் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகள் என அனைவரையும் ஏமாற்றியுள்ளனர். பண்டாரவளையில் இடம்பெற்ற நிகழ்வு முற்றுமுழுதாக ஒரு ஏமாற்று வேலையாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எக்ஸ் சமூக வலைத்தளத்தில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

பதுளை மாவட்டம், பண்டாரவளையில் பெருந்தோட்டப் பயனாளிகளுக்கு காணி மற்றும் வீட்டு உறுதிகளை வழங்குவதாகத் தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசாங்கத்தின் அண்மைய நிகழ்ச்சித்திட்டம், வெறும் தெரிவினை அறிவிக்கும் கடிதத்தை விநியோகிக்கும் செயல் மாத்திரமே.

இந்திய வீடமைப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2,000இற்கும் மேற்பட்ட தோட்டப் பயனாளிகளுக்கு வீடு மற்றும் காணி உறுதிகளை வழங்கியதாகக் கூறி, ஜே.வி.பி. அரசாங்கம் பண்டாரவளையில் பெரும் ஆரவாரத்துடன் ஒரு பிரமாண்டமான நிகழ்வை நடத்தியது. ஆனால் உண்மையில், புதிய வீடுகளோ, அடையாளம் காணப்பட்ட காணிகளோ இல்லை. அஸ்திபாரங்கள் கூட இடப்படவில்லை. வெறும் தெரிவினை அறிவிக்கும் கடிதம் மாத்திரமே வழங்கப்பட்டது.

மேலும், இது ஒரு ஏமாற்று வேலையாகும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையகத் தமிழ் அரசியல்வாதிகள், கடந்த அரசாங்கத்தின் போது கட்டப்பட்ட 234 வீட்டுக்கான உரிமைப் பத்திரங்களை அந்த வீடுகளில் வசிப்பவர்களுக்கு வழங்கியுள்ளனர். ஆனால், அவர்கள் 2,288 சட்டபூர்வமான உறுதிகளை வழங்கியதாகப் பெருமையுடன் ஒரு வெற்றுப் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தில் உள்ள ஜே. வி. பி. தமிழ் அரசியல்வாதிகள் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை, ஒட்டுமொத்த நாட்டையும், அத்துடன் இலங்கையில் உள்ள இராஜதந்திர சமூகம் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகள் என அனைவரையும் ஏமாற்றியுள்ளனர். அவர்கள் தமது சொந்தத் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவையும் கேலிக்குள்ளாக்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

## போதைப்பொருளுடன் ஒருவர் கைதானார்!

அக்கரைப்பற்று, ஒக். 18

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 260 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று முன்தினம் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதி விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சிறுமி துஷ்பிரயோகம்: 17 வயது சிறுவன் கைது

மட்டக்களப்பு, ஒக். 18

15 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 17 வயது சிறுவன் ஒருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேசம் ஒன்றைச் சேர்ந்த சிறுமி நேற்று முன்தினம் அதிகாலை தனது வீட்டின் அறையில் இருந்து காணாமல் போயுள்ளார். அச்சிறுமியை பெற்றோர் தேடிச் சென்ற நிலையில், வீதியில் 17 வயது சிறுவன் ஒருவர் நின்றுள்ளார். அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். குறித்த சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் பெண்கள் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சம்மாந்துறை பொலிஸ் நிலைய பிரிவில் 17 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

சம்மாந்துறை, ஒக். 18

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலைக்கவசம் அணியாமல், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல், போதைப் பொருள், நீதிமன்ற பிடியாணை மற்றும் போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சிலரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர். அத்தோடு 17 மோட்டார் சைக்கிள்களையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பறிமுதல் செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியில் வைத்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 160 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 39 வயதுடைய சம்மாந்துறை மட்டக்களப்பு தரவை 02 பகுதியைச் சேர்ந்த ஒருவரும், நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுயிருந்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சில மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியதுடன், கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சம்மாந்துறை, சவளக்கடை, கல்முனை பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.என். நிசாந்த பிரதிப்குமார தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

## தொழிலாளர் சம்பள விவகாரம் 25ஆம் திகதிக்குள் இறுதி தீர்வு

பதுளை, ஒக். 18

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்னைக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் இறுதி தீர்வு வழங்கப்படும். அந்தத் தீர்வை உள்ளடக்கியே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் நவம்பர் 7ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான கிட்ணன் செல்வராஜா தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் கடந்த திங்களன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கம்பனிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தார். இதேவேளை, புதனன்று பல்துறைசார் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் என்ற ரீதியில் அவர்களது சம்பளம் உள்ளிட்ட ஏனைய முக்கிய பிரச்னைகள் குறித்து ஜனாதிபதியிடம் யோசனையொன்றை முன்வைத்திருக்கின்றோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் அரசாங்கம் நேரடியாக தலையிடும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அந்த வகையில் ஜனாதிபதியிடம் எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மூலம் பெருந்தோட்ட மக்களுக்கு நிச்சயம் நன்மை கிடைக்கும். ஆரம்பத்தில் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சம்பளம் அதிகரிக்கப்பட்டது. பின்னர் சம்பள நிர்ணய சபையின் ஊடாக இந்த விடயம் அணுகப்பட்ட போது, மேலும் ஆண்டு அதிகரிக்கப்பட்டு சம்பள அதிகரிப்பு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இது நியாயமற்றதாகும் என்றும் அவர் கூறினார். (எ)

## முகநூல் ஊடாக கப்பம் கோரிய இருவர் கைது

மட்டக்களப்பு, ஒக். 18

மட்டக்களப்பு, புன்னைச்சோலை பிரதேசத்தில் ஒருவரிடம் முகநூல் ஊடாக அச்சுறுத்தி 70 ஆயிரம் ரூபாய் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 24, மற்றும் 19 வயதுடைய இளைஞர்கள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் கையடக்க தொலைபேசி வட்ஸ்அப் செயலிக்கு புகைப்படம் ஒன்றை சம்பவ தினமான கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பி, உனது முகநூல் பக்கத்தை ஹேக் செய்து அதில் உள்ள வீடியோக்களை புகைப்ப டங்களை தரவிறக்கம் செய்துள்ளதாகவும் 70 ஆயிரம் ரூபாய் பணம் தருமாறு கப்பம் கோரியதுடன் பணம் தர மறுத்தால் அந்த வீடியோக்கள், புகைப்ப டங்களை முகநூல் ஒன்றில் தர வேற்றம் செய்வேன் என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த நிலையில், 24 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்ததுடன் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 குறித்து....

கலந்துகொண்டபோது சுவிஸ் அரசாங்கம் சமஷ்டி தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கவிருப்பது போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னுடைய கருத்துகளைத் தெரிவித்திருந்தார். ஆனால், உண்மை அதுவல்ல. அங்கே பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் தலைவர்களை சுவிஸ் அரசாங்கம் அழைத்தது சமஷ்டி தொடர்பான ஒரு கற்பிதத்தை வழங்குவதற்கு மாத்திரமே தவிர, வேறு எதற்கும் அல்ல.

அங்கு அதிகம் வந்தவர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விடயங்களை முன்கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்கள்.

ஆனால், அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை அவர்கள் முன்னெடுக்கவில்லை. எனவே, இதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

அத்துடன், 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி எமக்குக் கிடைக்கின்ற குறைந்தபட்ச அதிகாரமான மாகாண சபை தேர்தலை நடத்தி அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதனால், மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். நாங்கள் அதிலே போட்டியிடுவோம்.

தேர்தல் தொடர்பில் பேசப்பட வேண்டும் என்று கூறுகிற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13ஆம் திருத்தச் சட்டம் தேவையில்லை என்று கூறி வருகின்றனர். எனவே, இது தொடர்பில் அவர்களிடத்தில் சரியான கருத்துகள் இல்லை - என்றார். (ஐ)

## மீனவர்...

முக்கியத்துவத்தை பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார் என்று அவரின் பணிமனை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கலந்துரையாடலில்,

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பரந்தளவிலான பேச்சு நடத்தப்பட்டது. இந்தப் பேச்சில், கல்வி, பெண்கள் அதிகாரம், புத்தாக்கம், அபிவிருத்தி ஒத்துழைப்பு, மற்றும் மீனவர்களின் நலன் ஆகியவை தொடர்பில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இது அயல் நாடுகளுக்கும் இடையே வலுவான மற்றும் நீடித்த உறவுகள், தங்கள் நாட்டு மக்களின் மற்றும் பரந்த தெற்காசிய பிராந்தியத்தின் செழிப்புக்கு முக்கிய பங்கு வகிப்பதை அங்கீகரித்து, பல முனைகளிலும் ஒத்துழைப்பை ஆழப்படுத்த இரு பிரதமர்களும் தங்கள் உறுதிப்பாட்டை இதன்போது வெளிப்படுத்தினர்.

இந்த சந்திப்பை தொடர்ந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி "இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல், புதுமை, மேம்பாட்டுக்கான ஒத்துழைப்பு, நமது மீனவர்களின் நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து நாங்கள் விவாதித்தோம். இந்தியா - இலங்கை இடையேயான ஒத்துழைப்பு, இரு நாட்டு மக்களின் செழிப்புக்கும், பிராந்தியத்தின் நலனுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" - என்று தனது எக்ஸ் தளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கை பிரதமரை சந்திக்கும்போது கச்சதீவை மீட்பது குறித்து கலந்துரையாடவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (ஐ)

## நிமலராஜனின்...

செய்தியாளராக நிமலராஜன் பணியாற்றியிருந்தார். நடுநிலை ஊடகவியலாளரான எனப் போற்றப்பட்ட அவர், கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி ஊரடங்கு சட்டம் நடைமுறையிலிருந்த வேளை யாழ்ப்பாணம் நகரில் இராணு வத்தின் உயர் பாதுகாப்பு வலயத்துக் குள்ளிருந்த அவரின் இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையை தொடர்ந்து நடத்தப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் அவரின் தந்தை, தாய், மருமகன் ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலி.வடக்கில்...

மக்களிடம் கையளிக்கவில்லை. கடந்த அரசாங்கம் கையளிக்கத் தயா ராக இருந்த காணிகளையே அவர்கள் ஆட்சிக்கு வந்த சில நாட்களில் மக்களிடம் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியை முழுமையாகத் திறந்து விட்டதன் ஊடாக உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள பலாலி காணிகளை விடுவித்தது போன்று காட்டுகின்றனர். பலாலி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கடந்த 35 வருட காலத்துக்கு மேலாக வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களின் சொந்த இடங்கள் இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டில் காணப்படுகிறது. அவர்கள் தங்கள் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ந்து போராடி வருகின்றனர்.

பலாலி இராணுவ மருத்துவமனையை சூழவுள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி மருத்துவமனை கட்டடங்களை இராணுவத்தினர் கட்டி வருகின்றனர். தற்போது போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த கீரிமலையில் ரேடார் அமைக்கப் போவதாகக் கூறி, 2 ஏக்கர் தனியார் காணியை கடற்படை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறது. ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியது போன்றே மக்களின் காணி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## போதைப்....

ஒழிப்பதற்காக கடந்த 13 ஆம் திகதி 'முழு நாடுமே ஒன்றாக தேசிய செயல்பாட்டுத் திட்டத்துக்காக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்த தேசிய செயல்பாட்டு சபையை நிறுவவும் முன்மொழியப்பட்டது.

இதன்படி, கூடிய தேசிய செயல்பாட்டு சபை, போதைப்பொருள் வலையமைப்பை ஒழித்தல், அதற்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு, போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க பொதுமக்களின் பங்களிப்பைப் பெறுதல், பொதுமக்களை அறிவூட்டுவதற்காக வெகுஜன அமைப்புகளின் பங்களிப்பு மற்றும் ஊடக பிரசாரத்தை செயல்படுத்துதல் குறித்து முக்கியமாக கவனம் செலுத்தியது.

இந்த செயல்பாட்டு சபையை நிறுவுவதன் பிரதானமான நோக்கத்தை விளக்கிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, போதைப்பொருள் அச்சுறுத்தலால் இளைஞர் சமூகம், பாடசாலை மாணவர்களின் வாழ்க்கை தற்போது ஆபத்தில் உள்ளவிதம் மற்றும் அது எவ்வாறு ஒரு சமூக - பொருளாதார பேரழிவாக மாறியுள்ளது என்பது குறித்து எடுத்துரைத்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும், முழு நாட்டையும் ஒன்றிணைக்கும் இத்தகைய விரிவான திட்டத்தைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தையும் இந்த நிகழ்வில் பங்கேற்ற மதத் தலைவர்கள் பாராட்டினர் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# யுத்த வெற்றியின் முழு கௌரவமும் மகிந்தவுக்கே உரித்தாகவேண்டும்!

## கூறுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஒக். 18

யுத்த வெற்றி அல்லது தோல்வியை அரசியல்வாதிகளே பொறுப்பேற்பார்கள். அவ்வாறெனில், இந்த யுத்தத்தை வெற்றி கொண்ட தற்கான முழு கௌரவமும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே உரித்தாக வேண்டும். அதனை யாராலும் தவிர்க்க முடியாது. அமைதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கி உலகின் பாரதூரமான பயங்கரவாத செயற்பாட்டை முடிவுக்கு கொண்டுவந்த அரச தலைவர் என்ற அடிப்படையில் மகிந்தவுக்கு நாம் கௌரவமளிக்கவேண்டும் என்று ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாளக் குழுவினருக்கு தேவையின் அடிப்படையிலோ அல்லது தேவையற்ற வகையிலோ பிரபல்யத்தை இந்த அரசாங்கம் பெற்றுக்கொடுத்தாலும், ஒவ்வொரு அரசாங்கங்களும் வெளிநாடுகளிலும் பாதாளக் குழு உறுப்பினர்களை கைது செய்துள்ளன. நான் பொது மக்கள் அமைச்சராக இருந்தபோதும் வெளிநாடுகளிலுள்ள பாதாளக் குழு உறுப்பினர்களை நாட்டுக்கு அழைத்து வந்துள்ளோம்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைகிறது. இந்நிலையில் இவ்வாறு செயற்பட்டால் தொடர்ந்தும் ஆட்சியிருக்கலாமென இந்த அரசாங்கம் கருதுகிறது. பாதாளக் குழு செயற்பாடுகளை முழுமையாக இல்லாமல் செய்து நாட்டில் அமைதியையும் மக்கள் சிறந்த முறையில் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மகிந்த ராஜபக்ஷவை தூக்கிலிட வேண்டும் என்ற கருத்து பீல்ட் மார்சல் சரத் பொன்சேகவினால் வெளியிடப்பட்ட கருத்தாகும். அதேபோன்று, குணமுடைய தமிழ், சிங்கள, முஸ்லிம் என சகல மக்களும் நிராகரிக்கும் அறிவிப்பையே அவர் வெளியிட்டுள்ளார்.

எனவே, யுத்தத்தை வெற்றி கொள்வது அரசியல்வாதிகளே. யுத்தமொன்றின் வெற்றி மற்றும் தோல்வியின் பொறுப்பை அரசியல்வாதிகளே ஏற்பார்கள்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி யுத்தத்தை வெற்றி கொண்டோம். அதற்கு சில தினங்களுக்கு முன்னர் கனடாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வந்த சிலர் யுத்தத்தை நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு கூறியிருந்தார்கள். அன்று யுத்தம் நிறுத்தப்பட்டிருக்குமாக இருந்தால் இன்றும் பயங்கரவாதம் இருந்திருக்கும். ஜனாதிபதி யுத்தத்தை நிறுத்துமாறு கூறியிருந்தால் இராணுவம் யுத்தத்தை நிறைவு செய்திருக்கவேண்டும்.

இந்த யுத்தத்தை வெற்றி கொண்டதற்கான முழு கௌரவமும் மகிந்த ராஜபக்ஷவுக்கே உரித்தாக வேண்டும். அதனை யாராலும் தவிர்க்க முடியாது. அதற்காக மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் என்று கூறமாட்டோம். அமைதியாக வாழக் கூடிய சூழலை உருவாக்கி கொடுத்து உலகின் பாரதூரமான பயங்கரவாத செயற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவந்த அரச தலைவர் என்ற அடிப்படையில் மகிந்தவுக்கு நாம் கௌரவமளிக்க வேண்டும் - என்றார். (அ)

## தமிழ்த்...

(பொறியியலாளர் ), உளநல மருத்துவர் மருத்துவர் எஸ். சிவதாஸ், மூத்த பத்திரிகையாளர் அனந்த பாலகிட்ணர், சமூக - அரசியல் செயல்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான கருணாகரன் சிவராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஐ)

## சுகாதார....

இலங்கைக்கான பணிப்பாளர் தகஃபுமி கடோனோவும் கையெழுத்திட்டனர்.

இந்தக் கடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்கள் திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகிறது. இந்தக் கடனுதவி, சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய மூலோபாயக் கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதுடன், இது இரண்டாம் நிலைச் சுகாதார சேவைகளின் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும், அனைவருக்கும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் முதல் பரிந்துரைச் சிகிச்சையாக செயல்படும்.

மேலும், இந்த நிதியுதவித் தொகுப்பில், தொற்றுநோய் நிதியத்தின் கீழ் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட கடன்களின் அடிப்படையில் வழங்கப்படும் 69 இலட்சம் டொலர் பெறுமதியான வெளிப்புற நிதியளிக்கப்பட்ட மானியமும் உள்ளடங்குவதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# தீபாவளியன்று மதுபானசாலைக்கு வடக்கில் பூட்டு

யாழ்ப்பாணம், ஒக். 18

தீபாவளி தினத்தன்று வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மதுபான சாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியிடம் வடக்கு மாகாண ஆளுநர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில், மதுவரித் திணைக்களத்தால் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, ஆளுநர் செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மக்கள்...

மட்டுமல்ல, அரசமைப்பே ஆட்சியாளர்களின் நலனுக்காகத் திருத்தப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆனால், தற்போதைய அரசாங்கம் அவ்வாறு ஒருபோதும் செய்யாது - என்றார். (ஐ)

## அடுத்த...

இதன்படி, தரம் 1, தரம் 6 மாணவர்களுக்கு சுய கற்றல் கையேடுகள் வழங்கப்படும். இந்த சுய கற்றல் கையேடுகள் தற்போது அச்சிடப்படுகின்றன. இதனால், இந்தத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்கான புத்தகப்பைகளின் எடையும் குறைக்கப்படும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## அதிகஷ்ட...

ஆசிரியர்கள் வருவதற்கு பின்னடிக்கும் நிலைமை காணப்படுகிறது. அதிகஷ்டப் பிரதேசத்திலிருந்து இந்தப் பாடசாலைகள் நீக்கப்பட்டு அதற்கான கொடுப்பனவும் ஆசிரியர்களுக்குக் கிடைக்காமல் போனால் நிலைமை இன்னமும் மோசமாகும் - என்றும் இதன்போது தெரியப்படுத்தப்பட்டது.

மத்திய கல்வி அமைச்சாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நேற்றைய தினம் ஆளுநரை சந்தித்த போது குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் வெளிப்படுத்தினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 26ஆம் திகதி வட மாகாணத்தில் 13 மணித்தியாலங்கள் மின் தடை

யாழ்ப்பாணம், ஒக். 18

**எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 13 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.**

மின் கட்டமைப்பில் அவசியம் தேவையான மாற்றத்தைக் கொண்டுவரவே இந்த மின்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, குறித்த தினத்தன்று காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)



# மகிந்தவை சந்தித்தது சீன வர்த்தகர்கள் குழு

கொழும்பு, ஒக். 18

சீன வர்த்தகர்கள் குழு ஒன்று நேற்று முன்தினம் தங்காலையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்தில் அவரைச் சந்தித்தது.

இந்த விஜயத்தின்போது முன்னாள் ஜனாதிபதிக்கு பரிசுகளை வழங்கிய குழுவினர், அவரது நலம் விசாரித்தனர்.

கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறி தங்காலையில் குடியேறிய பின்னர், முன்னாள் ஜனாதிபதியை சந்திக்க வந்த முதல் சீன வர்த்தகர்கள் குழு இதுவாகும்.

தேயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள இந்தக் குழு, வெலிகம மற்றும் நுவரெலியாவுக்குச் செல்லும் வழியில் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் படங்களை வெளியிட்டு பண மோசடி!

## மூவர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, ஒக். 18

மஹரகம, அபேக்ஷா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் போலியான புகைப்படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டு மில்லியன் கணக்கான பணத்தை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு ஸ்மார்ட் தொலைபேசிகளும் பொலிஸாரின் காவலில் எடுக்கப்பட்டன.

கடவத்த, ஜா-எல மற்றும் கிரிபத்கொடை ஆகிய பகுதிகளில் உள்ள சிறுவர்களின் பெற்றோர் அளித்த முறைப்பாடுகளை தொடர்ந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

விசாரணைகளின் போது, பல்வேறு இடங்களில் சிறுவர்களின் புகைப்படங்களைப் பெற்று, நிதி உதவி கோரி முறையிடும் தலைப்புகளுடன், குறித்த மூவரும் பேஸ்புக்கில் பதிவேற்றியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பூச்சி கொல்லி, உரம் பறிமுதல்!

சென்னை, ஒக். 18

இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக, இந்தியா - இராமநாதபுரம் உச்சிப்புளி அடுத்த நத்தை குளம் கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் சுமார் **36** இலட்சம் ரூபா பெறுமதியான பூச்சிக்கொல்லி உரம் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் கியூ பிரிவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த கடத்தல் சம்பத்தில் இருவரை கைது செய்த கியூ பிரிவு பொலிஸார், இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ள நிலையில் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நிலுவையில் உள்ள 3 இலட்சம் சாரதி அனுமதி பத்திரங்களை விரைவில் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 18

தற்போது வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள **300,000** க்கும் மேற்பட்ட சாரதி அனுமதி பத்திரங்கள், அடுத்த மூன்று மாதங்களுக்குள் அச்சிட்டு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குழுவிடம் விளக்கமளித்த அவர்கள், இந்த வருடத்திற்குள் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய புதிய சாரதி அனுமதி பத்திரமும் அச்சிடப்பட்டு வழங்கப்படும் என்று மேலும் தெரிவித்தனர்.

அத்தோடு, மேலதிகமாக சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான ஒரு மில்லியன் அட்டைகளை வாங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தின்போது இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (அ)

# தீபாவளியை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்!

கொழும்பு, ஒக். 18

தீபாவளி நீண்ட வார இறுதி நேற்று தொடங்கிய நிலையில், பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சிறப்பு பஸ் சேவைகளை ஆரம்பித்துள்ளது.

அனைத்து போக்குவரத்து ஏற்பாடுகளும் கொழும்பில் உள்ள பஸ்ரியன் மாவத்தை பஸ் நிலையத்திலிருந்து ஒருங்கிணைக்கப்படும்.

குறிப்பாக ஹற்றன், வெலிமடை, பதுளை, பசறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பாதைகளில் அதிகளவு பஸ்கள் சேவையில் ஈடுப்படுத்தப்படவுள்ளன.

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நீண்ட நாள் மீன்பிடிக் கப்பல் பறிமுதல்

## ஐந்து பேர் கடற்படையினரால் கைது

கொழும்பு, ஒக். 18

இலங்கைக்கு தெற்கே உள்ள சர்வதேச கடற்பரப்பில் போதைப்பொருட்களை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் நீண்ட நாள் மீன்பிடிக் கப்பல் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது அந்த கப்பலில் இருந்த ஐவர் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்கள் காலி துறைமுகத்துக்கு கொண்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ)

# இஷாரா செவ்வந்தியிடம் தொடர்கிறது விசாரணை

## பல விடயங்கள் வெளிவந்தன

கொழும்பு, ஒக். 18

நேபாளத்திலிருந்து அழைத்துவரப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் ஊடாக பல விடயங்கள் தெரியவருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, கணேமுல்ல சஞ்சீவவின் கொலை இடம்பெற்ற பின்னர் இஷாரா செவ்வந்தி தலைமறைவாகியிருந்ததாகக் கூறப்படும் மீதெனிய பகுதியிலுள்ள வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வீட்டிற்கு இஷாரா அழைத்துச் செல்லப்பட்டு அங்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தங்காலை பகுதியிலும் இஷாரா தங்கியிருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சஞ்சீவவின் கொலைக்குப் பின்னர் இஷாரா செவ்வந்தி வாடகை வாகனம் ஒன்றினூடாக கிளிநொச்சிக்கு சென்று அங்கு சில நாட்கள் தங்கி, அதன் பின்னர் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்று, யாழ்ப்பாணத்திலிருந்து படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாக இஷாரா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் மூன்று வாரங்கள் தங்கியிருந்த நிலையில் அங்கிருந்து நேபாளத்திற்கு தப்பிச் சென்றதாகவும் அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்தியாவில் சுமார் இரண்டு வாரங்கள் தங்கியிருந்த போது, ஜே.கே. பாய் அவருக்கு "தமிழினி" என்ற பெயரில் ஒரு இந்திய அடையாள அட்டையை தயாரித்துக் கொடுத்துள்ளார். அதன் பின்னரே நேபாளம் சென்றதாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

# இணையவழி கடன் வழங்கும் நிறுவனங்கள் கண்காணிப்பில்!

கொழும்பு, ஒக். 18

இணையத்தளம் மூலமாகவும், தொலைபேசிகள் மூலமாகவும் கவர்ச்சிகரமான விளம்பரங்களை வெளியிட்டு, சில சமயங்களில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு, பிணையில்லாமல் உடனடியாகக் கடன் வழங்க முடியும் என்று கூறி கடன் வழங்குவதற்காக முன்வந்த பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்கள் இலங்கை பொலிஸாரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

அத்தகைய நிறுவனங்களிடமிருந்து தொலைபேசிகள் மூலம் கடன் வாங்கும்போது செலுத்தவேண்டிய வட்டி வீதம் மற்றும் கடன் கால அவகாசம் குறித்து உரிய கவனம் செலுத்தாமல் கடன் வாங்குவதால் பொதுமக்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு உள்ளாகியிருப்பது இலங்கை பொலிஸாருக்கு கிடைக்கும் முறைப்பாடுகளில் கண்காணிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான சமயங்களில் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது எதிர்பாராதவிதமாக அதிக வட்டி செலுத்த நேரிடுவதுடன், அந்தக் கடன் நிறுவனங்கள் கடனை வசூலிக்க கடன் பெற்றவர்களை மன உளைச்சலுக்குள்ளாக்கும் வகையில் அழைப்புகள் விடுப்பது மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக அவமானகரமான பிரசாரங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் இலங்கை பொலிஸாருக்கு நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

இதற்கமைய, இவ்வாறாக இணையம் மற்றும் தொலைபேசிகள் மூலம் கடன் வழங்கும் நிறுவனங்கள் குறித்து இலங்கை பொலிஸாரால் இலங்கை மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மேற்பார்வைப் பிரிவில் வினவியபோது, அத்தகைய நிறுவனங்களில் பெரும்பாலானவை இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைக்கு உட்பட்டவை அல்ல என்றும், கடன் வழங்கும் நிறுவனங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org